UNIVERSITY OF JAFFNA SRI LANKA
RECEIVED
1986
PERIODICALS

விலை ரூபா 1-25

# ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 19 றம்ழான் 23 இதழ் 1 1
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-6-1986

பண்ணைப்பால வீதியில் கண்ணிவெடி:

## இராணுவ கவசவண்டி சேதம்

## ஷெல் அடி: 3 பேர் பலி, 39 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

நீண்ட நாட்களுக்குப் பின்னர் யாழ் குடா நாட்டில் நேற்றுப் பண்ணைப் பாலவீதியில் கண்ணிவெடித்தாக்குதல் ஒன்று இடம் பெற்றது. இதில் கோட்டை நோக்கி மண்டைதீவிலிருந்து வந்த இராணுவ கவசவாகன மொன்று பலத்த சேதத்துக்குள்ளாகி கடலினுள் தூக்கி வீசப்பட்டது.

சங்கிலிப்பாலத்திலிருந்து மூன்றுவது மின்கம்பத்தடியில் வெடிச்சத்தத்தை தொடர்ந்து அக்கவச வாகனம் கடலில் மேலே எழும்பி விழுந்ததை பார்த்ததாக அலுப்பாந்தி இறங்குதுறை அருகில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களாக அப்பாதையால் இராணுவ வாகனங்கள் மட்டுமே சென்று வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர் சத்தம் கேட்டதும் அவ்விடத்தில் கரும்புகை மேல்நோக்கி சென்றதாகவும் தெரிவித்தனர்.

இக்கண்ணி வெடித்தாக்குதலையடுத்து யாழ் நகரில் நேற்று பிற்பகல் பரவலாக தொடர்ந்து ஐந்து மணிநேரம் நடந்த ஷெல் தாக்குதலில் இருசிறுவர் உட்பட மூவர் பலியானார்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

"இன வன்முறைகள் தொடர்ந்தால் —

# இலங்கையின் நேச நாடுகள் ஊடாக தீர்வு நிர்ப்பந்தம்!

## பெர்னுட் வந்துள்ளார்

[கொழும்பு]

இந்தியவுக்கான இலங்கைத் தூதுவர் திரு பெர்னுட் திலகரத்தின இனப்பிரச்னை தொட

(5ம் பக்கம் பார்க்க)

## சிவ்சங்கர் எச்சரிக்கை

ஹைதராபாத், ஜுன் 1

"இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழர்கள்மீது தொடர்ந்து வன்முறைகளை மேற்கொண்டு வருமானல் இலங்கையின் நேசநாடுகளூடாக இந்திய அரசாங்கம் இலங்கைமீது தகுந்த தீர்வு நடவடிக்கைகளை 'நிர்ப்பந்திக்கும்' என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சிவ்சங்கர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சர் திரு. சிவ்சங்கர் நேற்று ஆந்திரப்பிரதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார் அங்கு ஹைதராபாத் நகரில் செய்தியாளர்களின் பேட்டியொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு சிவ்சங்கரிடம் இலங்கைப்பிரச்னை தொடர்பாக கேள்விகளை எழுப்பிய பத்திரிகையாளர்கள், "இலங்கை அரசாங்கம் இலங்கைத் தமிழர் மீது தொடர்ந்து வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுமானல் இந்தி[illegible] செய்யும்?" என்று கேள்வியை எழுப்பினர்.

அப்போது அவர் பதிலளிக்கையிலேயே "இலங்கை அரசாங்கம் அப்படிச்செய்யுமானல் இந்திய அரசாங்கம் இலங்கைப்பிரச்னை தொடர்பாக புதிய முறைளில் அமைதித் தீர்வைத் தீவிரப் படுத்தும்.

இலங்கையின் நேசநாடுகளுடக தொடர்பு கொண்டு இலங்கைப பிரச்னைக்கு அந்நாடுகளூடான இந்தியா அமைதித்தீர்வை இலங்கை அரசு மீது தீவிரமாக நிர்ப்பந்திக்கும்" என்றார்.

[illegible]

மேலும், இலங்கையின் இனப்பிரச்னைக்கு அமைதி வழியில் தீர்வுகாண இலங்கை அரசு விரும்பினல் அதற்கான தீர்வுகளை அதுதகுந்தவகையில் முன்வைக்க வேண்டுமென்றார்.

[5ம் பக்கம் பார்க்க]

பண்ணைப்பால கண்ணிவெடி:

## தமிழீழ ராணுவம் உரிமை கோருகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். பண்ணை சங்கிலிப் பாலத்துக்கு அருகாமையில் மது இயக்கத்தின் தற்கொலைப் படையினரால் நேற்று வைக்கப்பட்ட தன்னியக்கக கண்ணிவெடியில், கவசவாகனம் ஒன்று நிர்மூல[illegible] ஒன்றுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் சிலர் காயமடைந்ததாகவும் தமிழ்ஈழ ராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'தமிழ் ஈழ ராணுவத்தின் ஆணைச்சபையால் விடுக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"கோட்டை முகாமுக்கும் அதற்குப் பாதுகாப்பாகவும் யாழ். குடாநாட்டில் உள்ள [illegible] சிறிலங்கா ராணுவ முகாம்களுக்கும் இடையிலிருக்கும் வீதித்தடையை நீக்குவதற்காகவும், சிறிலங்கா ராணுவத்தினரின் முகாம்களை மேலும் பலப்படுத்துதவற்காகவும் ஏற்படுத்தப்பட்ட நடவடிக்கை தமிழ் ஈழ ராணுவமாகிய எம்மால முறியடிக்கப்பட்டது.

எமது தற்கொலைப்படையினரால் திட்டமிட்டுவைக்கப்பட்ட தொடர்பு, தன்னியக்க தொடர்பு கண்ணிவெடியில் சிறிலங்கா அரசால் தென்கொரியாவில் இருந்து அதிக செலவில் கொண்டுவரப்பட்ட பாரியகவசவாகனம் நேற்று நண்பகல் பண்ணை சங்கிலிப் பாலத்திற்கு அருகாமையில் தகர்க்கப்பட்டு கடலில் வீசப்பட்டநிலையில் நிர்மூலமாக்கப் பட்டது"

[மா]

## மூடிய 'ட்ரக்' வண்டியில் பாரிய பொருள்!

[வவனியா]

மூடப்பட்ட இராணுவ ட்ரக்வண்டியொன்றில் பொருளொன்றை ஏற்றிக்கொண்டு பதினைந்து வாகனங்கள் சகிதம் ஆனையிறவிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட இராணுவ வாகனஅணியொன்று காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வவனியாவிற்கு நேற்றுக்காலை வந்த இ. போ. ச. பஸ்கள், தனியார் மினிபஸ்கள் ஆகியன நேற்று

[5ம் பக்கம் பார்க்க]

## ரயில்பெட்டிகளின் அடியில் குண்டு

(கொழும்பு)

நேற்றுமுன் தினம் உதயதேவியைச்சேதமாக்கிய குண்டு ரயில்பெட்டிகளின் அடியிலேயே வைக்கப்பட்டிருக்க வேண்டுமென பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக சுமார் 20 பேர் விசாரணைக் குட்படுத்தப்பட்டிருப்பதாகவும் இவர்களில்

(-5ம் பக்கம் பார்க்க)

## நேற்றைய ஷெல் தாக்குதல், ஆஸ்பத்திரியில் உள்ள காயமுற்றோர் விபரம்

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரில் நேற்று நண்பகல் பரவலாக நடந்த ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் 1ம்வாட்டில் அனுமதிக்கப்பட்டிருப்போர் விபரம்: எஸ். சௌந்தரராஜன் [35 வயது] சன்னதிட்டி, யாழ்ப்பாணம், எஸ் நேசன் [18 வயது] அத்தியடி, எஸ் செபஸ்தியான் [25 வயது] குருநகர், வி. ராஜேஸ்வரன் [18 வயது] ஏழாலை, கே. கனகரத்தினம் [40 வயது] யாழப்பாணம், கே. இராசு [25வயது] அத்தியடி யாழ்ப்பாணம், பி. முபராக் [18 வயது] முஸ்லிம் தெரு யாழ்ப்பாணம், வி.

(5ம் பக்கம் பார்க்க)

எலிபென்ட் ஹவுஸ் குண்டு:

## லொறிச்சாரதி சடலம் அடையாளம் காணப்பட்டது

[கொழும்பு]

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கொம்பனித்தெருவில் உள்ள இலங்கை குளிர்பானத் தொழிற்சாலையில் [எலிபண்ட் ஹவுஸ்] வெடித்த பாரிய குண்டு வைக்கப்பட்டிருந்த லொறியின் சாரதியினது சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளீனரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

தேசிய அடையாள அட்டையிலிருந்து விபரங்களைக் கொண்டு பலியான சாரதி வடமராட்சிப் பகுதி அல்வாயைச்சேர்ந்த கே. தங்கராசா [வயது 49] என அடையாளம் காணப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பின் போது பலியான லொறிச்சாரதி, கிளீனர் ஆகிய இருவரினதும் சடலங்களையும் அடையாளம் காட்டி சடலங்களை எடுத்துச் செல்லுமாறு உறவினர்களைப் பொலிஸார் பணித்துள்ளனர்.

இருவரின் சடலங்களும் கொழும்பு பொலீஸ் நிலைய சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இறந்து போன லொறிச் சாரதி கே. தங்கராசா என்பவர் அண்மைக் காலமாக நெல்லியடியில் வசித்துவந்ததாகவும்அறிவிக்கப்படுகிறது. [மா]

## நெடுந்தீவில் இரு அடையாள அட்டைகள் கரை ஒதுங்கின

[நெடுந்தீவு]

இருதேசிய அடையாள அட்டைகள் நெடுந்தீவு தெற்குக் கற்கரையில் வெள்ளை என்ற இடத்திலும் சாமிப் பிட்டி என்ற இடத்திலும் கரை ஒதுங்கியநிலையில் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

பாபு என்று அழைக்கப்படும் பீற்றர் ஜோண்சன் அந்தோனி, இவர் மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

பிறந்த திகதி: 1959-11-12 தொழில்: கடற்றொழில் வதிவிடம்: 36/1 A பள்ளிமுனை மன்னார் கிழக்கு.

தேசிய அடையாள அட்டை இல: 5931741166 V திகதி: 85 - 07 - 11.

மற்றைய அட்டைவிபரம் பெயர் திரவியம் அசஸ்ரின் பிறந்த திகதி: 1957 - 11 - 24 மன்னார் தொழில: கடற்றொழில் வதியும் இடம் கட்டுக்காரன் குடியிருப்பு, தலைமன்னார் தேசிய அடையாள அட்டை இல: 573092384V திகதி: 82 - 08 - 31.

இரண்டு அடையாள அட்டைகளும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

## உடனடி அரசியல்தீர்வு காணப்படவேண்டும்

## அ. இ. ச. இ. வேண்டுகோள்

[சென்னை]

"இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்தி பாதுகாப்புடனும் கண்ணியத்துடனும் அவர்கள் வாழ்வதற்கு உறுதிப்பாடு அளிக்கும் வகையில் உடனடியாக அரசியல் தீர்வொன்று காணப்படுவதற்கு

(5-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

எட்டு [8]போத்தல் பால் தரக்கூடிய ஜேசி கலப்பு இனப் பசு விற்பனைக்குண்டு. கன்று ஈன்று ஐம்பது நாட்கள். தொடர்பு: திருமதி ச. தியாகராசா, சரஸ்வதி இல்லம், சுளிபுரம் கிழக்கு, சுளிபுரம். C-2644

40 நாள் வயதுடைய 4 அல்சேஷன் சுத்தஇனக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. K. வைரமுத்து, இல. 46, கலட்டி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம் அல்லது 969, காங்கேசன்துறைவீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணம். (A 700)

நல்லநிலையிலுள்ள போட் பிறிபெக்ட் கார் 1 SRI விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். றிக்கோ யாழ்ப்பாணம். [C-2640

சில்லாலை கதிரைமாதா கோவிலுக்கு அண்மையில் நல்லநிலையில் கிணற்று வசதியுடன் கூடிய ஆறு [6] பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: G P வில்லியம், அலுக்கைச் சந்தி, அளவெட்டி. [C-2601]

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

[5 ஸ்ரீக்குமேல்] நல்ல நிலையான வெஸ்பா [Vespa] ஸ்கூட்டர் தொடர்பு; J.P.T. 3, நவீன சந்தை, [மேல்மாடி) யாழ்ப்பாணம், (C-2623)

சகல வசதிகளும் கொண்ட 2 அறை வீட்டுடன் 4 பரப்புக் காணி கைதடி மேற்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: C-2632 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-2632)

## தேவை

மின்சார மோட்டர் றீவைன்டிங் தொழிலில் 5 வருடத்திற்குமேல் அனுபவம் உள்ளவர்கள் தேவை. சம்பளம் 1000 முதல் 1500 வரை. ஒலிம்பியா ஓட்டோ வேக்ஸ், ஸ்ரேசன் ரூேட், சுன்னுகம். [C-2592]

கிறீஸ்தவ சேவை மனப்பான்மையுடைய, குடும்பப் பொறுப்பற்ற 35 — 40 வயதுக்கு இடைப்பட்ட பெண் உதவியாளர் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடவசதி, சம்பளம் கொடுக்கப்படும். நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். பொறுப்பதிகாரி, இரட்சணியசேனை இல்லம், கைதடி. (C-2631)

டிஸ்பென்சரியில் வேலைசெய்வதற்கு விவாகமாகாத பெண் உதவியாளர் தேவை. வைத்தியசாலைக்கு அருகாமையில் வசிப்பவருக்கும், அனுபவம் உள்ளவருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். 10-06-86ற்கு முன் மனுச்செய்யவும். C-2646

தையல்வேலையில் அனுபவம் வாய்ந்த பெண்கள் தேவை. தொடர்பு: நாகூர் ரெயிலர்ஸ், K. K. S. ரூேட், கொக்குவில். (தபாற் கந்தோருக்கு அருகாமையில்). C-2652

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வ, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகாலநரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D.A.M., மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

## வாடகைக்கு

யாழ்நகர் ஞானம்ஸ் ஸ்ருடியோ கட்டிட மேல்மாடியில் சகல வசதிகளுடன்கூடிய மூன்று பெரிய கடைகள் [தனித்தனியாக 325 சதுர அடி விஸ்திரணம் கொண்டவை] வாடகைக்கு உண்டு. அலுவலகம், மொத்த விற்பனை நிறுவனம், தொலைத்தொடர்புச்சேவை போன்ற தொழில் நிலையங்களுக்கு மிகவும்ஏற்றவை. நேரில்தொடர்பு கொள்க: ஞானம்ஸ் ஸ்ருடியோ, இல. 301, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம். [C-2627]

## கல்வி

Radio and Electronic Engineering நீடியகாலமாக யாழ். நகரில் ''பொறியியல் கல்வி நிலையம்'' என்ற வியாபாரப் பெயரில் கல்விச் சேவையை நடத்திவந்தS. C. Emmanuel B. Sc. (Cey) G. I. M. I. Associate I. E. E. (London) என்பவர் பாதுகாப்பு காரணமாக தமது இல்லத்தில் நடத்துகிருர். கடிதமூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்க: 'புஸ்ப வில்லா' இல. 14 சங்கானை ரூேட், அச்சுவேலி. C-2573

## தவறிவிட்டது

சிதம்பரப்பிள்ளை விக்கினேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை இல. 621520156V தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள். கீழ்க் காணும் விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். சி. விக்கினேஸ்வரன், ஜெயகிருஷ்ணு ஸ்ரோர், இல. 109, கண்டிரூேட், கிளிநொச்சி. C-2655

## தேவை

கற்பூரம், மெழுகுவர்த்தி, தேயிலை முதலிய வேலைகள் செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும் குறிப்பு:[ நல்லூர் கோயில்பின் வீதி] முகவரி: V. அரியரெட்ணம், 151, கோவில்வீதி, நல்லூர். [C-2628]

சைவச்சிறுவர் விடுதிக்கு 45-60 வயதுக்கு உட்பட்ட இளைப்பாறிய ஆசிரியர் அல்லது இளைப்பாறிய அரசாங்க ஊழியர் மேற்பார்வையாளராக பணியாற்றுவதற்கு தேவை. எழுத்துமூலம் 15-06-1986க்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். தொடர்பு:- விளம்பர இல. C-2653. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-2653

## பருத்தித்துறை நகரசபை வேலைப்பகுதிப் பொருட்களுக்கான கேள்வி விளம்பரம் 1986

பருத்தித்துறை நகரசபை செயலாளரால் 1986ம் ஆண்டிற்கு வேலைப் பகுதிக்கான பொருட்களை விநியோகிப்பதற்காக அரக்கு முத்திரை (சீல்) இடப்பட்ட கேள்விகள் இணைப்பிரதிகளில் 30-0 -1986ந் திகதி நண்பகல் 12-00மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 100ஐயும், மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10/-ஐயும் இவ்வலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 27-05-1986ந் திகதி பி. ப. 12-30 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம்.

வ. இராமச்சந்திரன்,
செயலாளர்,
நகரசபை, பருத்தித்துறை.
நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
12-05-1986 C-806

## முதலாண்டு கண்ணீர் அஞ்சலி



கந்தசாமி தம்பிஐயா
R. F. O. காட்டுகஸ்தூரியா
அன்னையின் மடியில்: 18-07-1945
கொடியவர் பிடியில்: 15-05-1985
திதி: 02-06-1986

பண்புமிகு உங்கள் அன்பிற்கிளைத்த பாலர் நாம் பத்து வயது தானும் நிரம்பமுன் அதை இழந்தோம்-என்ருலும் உங்கள் அந்தராத்மா எங்களைச் சுற்றியவண்ணமிருப்பதை உணர்கிருேம். அருள்மிகு அப்பா உங்கள் அடியிணைக்கெம் வணக்கம்.

ஆருயிர்க் குழந்தைகள்:
கவிதா, காண்டீபன்,
கங்கைவேணியன்,
காயத்ரி

இல்லறமென்ருல் இப்படித்தான் அமைய வேண்டுமென எவரும் வியப்பபத்தாண்டுகாலம் பண்பு வாழ்க்கை வாழ்ந்த பரமபதியே நீங்கள் என்றென்றும் எம் இதய தெய்வமாய் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். உங்கட்கென் வணக்கம்.

அன்பு மனைவி.

தாயிழந்த நின்னை வளர்த்தெடுக்க நானும் சின்னம்மாவும் பட்ட கஷ்டம்பல. இப்பொழுது தந்தையை இழந்த பச்சிளம் பாலரை பராமரிக்கும் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்துச் சென்று விட்டாய் உன் ஆன்மா சாந்தியடைவதாக.

பாசமிகுபெற்ருேர்.

மற்றும் கண்ணீருடன் நினைவுகூரும்:
மைத்துனர்மார்,
மைத்துனிகள், சகலன்.
தென்புலோலி.
அன்புத்தங்கை,
மைத்துனர், மருமகள்.
நவிண்டில் (C-2608)

உ

கைதடி
மார்க்கண்டு சுவாமிகளின்
## குருபூசை
6-6-1986 வெள்ளிக்கிழமை
ஆச்சிரமத்தில் நடைபெறும்.

அடியார்கள்.
(A 807)

## பம்பாய் வெண்காய விதை

அராலி பம்பாய் வெண்காய உற்பத்தியாளர் சங்கத்தின் முயற்சியால் இறக்குமதி செய்யப்பட்ட விதை, விவசாய அதிகாரிகளால் உத்தரவாதம் செய்யப்பட்டது. விஞ்ஞான முறைப்படி களஞ்சியப்படுத்தப்பட்டது. வெளிவந்த பயிர் திறமையாகவுள்ளது. சிறிய அளவு விதை கையிருப்பிலுள்ளது
பெறுமிடம்:

ஸ்ரீ மகள் ரேடர்ஸ்
158, ஆஸ்பத்திரி வீதி,
[பெரியகடை]
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23572 [C2641]

## தேவை

தரமான கொப்பரு கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்:

மல்ரி ஒயில்
K.K.S ரூேட்,
இணுவில்.
தொலைபேசி: 339 (சுன்னுகம்)
[C 2643]

## தேவை

தேர்ச்சிபெற்ற ரூேணியோ ஒப்பரேற்றர் தேவை.
வேலை செய்யக்கூடியவருக்கு கவர்ச்சியான ஊதியம்.
பகுதி நேர வேலைக்கும் அனுபவசாலிகள் பரிசீலிக்கப்படுவர்.

நேரில் வரவும்.

உயர் கல்விப பதிப்பகம்,
36, சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
(C 2649)

## அதி உன்னத சத்துணவு

## ஜீவாகாரம்
## JEEVAHARAM

இது முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட உப உணவு

- ★ வளர்ந்து வரும் குழந்தைகட்கும்
- ★ கர்ப்ப தாய்மார்களுக்கும்
- ★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- ★ போசாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
- ★ ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையின்
ஆரம்ப சுகாதார நிலைய
குழந்தை வைத்திய திணைக்களத்தின்
அதி உன்னத கண்டுபிடிப்பு ஜீவாகாரம்

தயாரிப்பு:
அண்ணு தொழிலகம்,
இணுவில்.
தொலைபேசி: 021 - 23412, 021 - 23413
(A 720)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுஅழிவிலிருந்து உலகைக்காக்க மாற்றுசக்தி ஒன்று வேண்டும்

## உலக மருத்துவர் மாநாட்டில் வேண்டுகோள்

**கொலோன், ஜூன்-1**

**"உலகில் ஏற்படும் அழிவுகளைத் தடுத்து நிறுத்த அணுசக்திக்கு மாற்றுகச் சக்தி ஆதாரம் ஒன்றை அபிவிருத்தி செய்யவேண்டும்" என்று சர்வதேச மருத்துவர்களின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.**

மேற்கு ஜெர்மனியின் கொலோன்னுவில் சர்வதேச மருத்துவர்களின் மாநாடு நடைபெற்றது. நேற்று முன்தினம் முடிவடைந்த இம் மாநாட்டின் இறுதியிலேயே இத்தீர்மானம் ஏகமனதாகக் கொண்டுவரப்பட்டது.

அணுசக்தி ராணுவ உபயோகிப்புக்கு மட்டுமன்றி மனித சமூகத்துக்குத் தொடர்ந்து பெரும் அச்சுறுத்தலாக இருந்துவருவதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

சுவிட்சர்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகள் அணுசக்தியை முற்றாகத் தடைசெய்ய வேண்டுமென்ற பிரேரணையைக் கொண்டுவந்தபோதும் நோபல் பரிசுபெற்ற சர்வதேச மருத்துவர்கள் அணுசக்தியிலுள்ள எல்லாப் பயனகளையும் ஒரேயடியாக நிராகரித்துவிட முடியாதென்று கூறியுள்ளார்கள். இந்நிலையில் மற்றைய பிரதிநிதிகள் அதனை விரும்பாவிட்டாலும்கூடச் சோவியத் பிரதிநிதிகள் அணுசக்தி முழுத் தடையற்றி விவாதித்ததாக அறிவிக்கப்பட்டது.

இதேவேளை செர்னோபலில் போன்று நீரால் குளிர்விக்கப் படும் 'காஸ்' அணு உலைகள் பாதுகாப்பானதல்ல என்று 1940ம் ஆண்டளவிலேயே கருதப்பட்டதாக அணுக்குண்டுகளைக் கண்டுபிடித்தவர்களில் ஒருவரான டாக்டர் எட்மன்ட் டெலர் நேற்று முன் தினம் இஸ்ரேலிய வானொலியில் கூறியுள்ளார்.

இத்தகைய அணு உலைகள் அமைந்துள்ள பகுதியை உள்ளக்கிய எட்டுக் கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திற்குள் பொதுமக்களை அனுமதிக்கக் கூடாதென்று அமெரிக்கா அப்பொழுது எச்சரித்ததாக நினைவுபடுத்திய டாக்டர் எட்மன்ட், உலகின் பெரும்பாலான அணு உலைகள் பாதுகாப்பானவைகள் என்றும் அண்மையில் இடம்பெற்ற செர்னோபில் விபத்துப் பாதுகாப்பு ஏற்பாட்டை மேலும் வலுப்படுத்த உதவுமென்றும் கூறினார்.

மிகக் கடுமையான ஆபத்திலிருந்து சரியானவகையில் அணுசக்தியைப் பயன்படுத்த நாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்பதே இறுதியான நடவடிக்கையாக இருக்கவேண்டுமென்றும் திரு எட்மன்ட் வலியுறுத்தினார். [ரா]

**உலகச் செய்திகள்**

## யானைமார்க் குளிர்பான முகவர் மறுப்பு

[வவனியா]

சிலோன் கோல்ட்ஸ்ரோர்ஸ் சில் குண்டு வெடிப்பிற்குள்ளான லொறி வவனியாவிலிருந்து புறப்பட்டதென சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை வவனியா யானை மார்க் குளிர்பான முகவர் மறுத்துள்ளார்.

யானை மார்க் குளிர்பான முகவரின் லொறி கொழும்புக்குப் போகவில்லையென்றும் அந்த லொறி கடுவலை க்குச் சென்றதாகவும் அங்கு அந்த லொறி சாரதி கிளினருடன் பாதுகாப்பாக நிற்பதாகவும் வவனியா முகவர் தெரிவித்துள்ளார். (வ)

## கலால் ஊழியா மூவரும் விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கல்முனை வீதியில் வைத்துக் கடத்தப்பட்ட கலால் ஊழியர் மூவரும் நேற்று முன்தினம் பத்திரமாக விடுவிக்கப்பட்டனர்.

கடந்த வியாழக் கிழமை காலை சாராயத்திற்கு உபயோகிக்கப்படும் 'ஸ்பிறிட்' கொண்டு சென்ற பவுஸரும் அதிலிருந்த தமிழ், சிங்களம் பறங்கிய இனங்களைச் சேர்ந்த மூன்று கலால் இலகா ஊழியர்களும் இனம் தெரிய நபர்களால் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டது தெரிந்ததே. (மா)

## யாழ். தொலைத் தொடர்பு நிலையம் இடம்மாறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டைக்கு சமீபத்தில் இயங்கிவந்த தொலைத் தொடர்புநிலையம் வேறு இடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது.

பதற்ற நிலை காரணமாக கடந்த எட்டு நாட்களாக ஊழியர்கள் அங்கு செல்லவில்லை. மற்றொரு காரியாலயத்தில் தற்போது தினமும் ஊழியர்கள் கையெழுத்திட்டு வருகின்றனர்.

இந்நிலையத்திற்கு யாழ். நகருக்குள் பாதுகாப்பான இடத்தில் இரு வீடுகள் பார்க்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் இந்நிலையம் இடம்மாறும் என்றும் கூறப்படுகிறது. (க)

"உலகக் கிண்ண" உதைபந்தாட்டம்

## இன்றைய ஆட்டங்கள்

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெறும் 13வது "உலகக் கிண்ண" உதைபந்தாட்டப் போட்டிகளின் இன்றைய ஆட்ட விபரங்கள் வருமாறு:

குறூப் - A:- ஆர்ஜன்டீனு எதிர் தென் கொரிய.

குறூப் - C:- ரஷ்யா எதிர் ஹங்கேரி

குறூப் - F:- போலந்து எதிர் மொறுக்கோ. [வி]

## யாழ் ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் கட்டணம் இல்லை

[யாழ்ப்பாணம்]

"நோயாளர்களுக்கான அம்புலன்ஸ் வண்டிச் சேவைக்கென யாழ் பெரிய ஆஸ்பத்திரி நிர்வாகத்தினுல் எரிபொருள் கட்டணம் எதுவும் இதுவரை காலமும் அறவிடப்படவில்லை. எதிர்காலத்திலும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது" என்று யாழ். பெரியாஸ்பத்திரியின் நிர்வாக உயர்அதிகாரி நேற்றுத் தெரிவித்தார்.

யாழ் பெரியாஸ்பத்திரியின் அம்புலன்ஸ் வண்டிச் சேவைக்கான எரிபொருள் செலவுகள் தொடர்பாகப் போதனு வைத்திய சாலைகளுக்கான அமைச்சு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உதவியுடன் வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்துள்ளதாகவும் எரிபொருள் செலவுக்காக நோயாளர் அம்புலன்ஸ் வண்டியைக் கட்டணம் செலுத்திப் பெறவேண்டியதில்லை என்றும் இந்த உயர்அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஐ)

## "உலக சமாதானத்துக்கு அமெரிக்காவே தடை"

### பிரி. எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

பெங்களூர், ஜூன்-1

"சர்வதேசரீதியில் நிலவும் பாதுகாப்பற்ற போக்கை அகற்ற அமெரிக்கா விரும்பாததினுல் நிரந்தரமான உலக சமாதானத்தை உருவாக்க முடியாதுள்ளது" என்று பிரிட்டனின் எதிர்க்கட்சித் தலைவர் திரு. நீல் கினேக் அமெரிக்கா மீது குறை கூறியுள்ளார்.

தற்பொழுது இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள திரு நீல் கினேக் நேற்று முன்தினம் பெங்களூரில் வர்த்தக தொழில்துறை சம்மேளன உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அமெரிக்கா மீதான இந்தக் குறைபாட்டினைத் தெரிவித்தார்.

"அமெரிக்காவின் இந்தப் போக்கினுல் அண்மையில் டோக்கியோவில் நடைபெற்ற ஏழு நாடுகளின் உச்சிமாநாட்டால் எதனையும் சாதிக்க முடியாதுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

தடுமாறிவரும் உலகப் பொருளாதார நிலையை மேம்படுத்த 1944ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'பிரட்னம்' பொருளாதார முறையை மீண்டும் செயல்படுத்துமாறு தொழில்வள நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்த திரு கினேக், புதிய 'பிரட்னம்' ஒப்பந்தத்தினுல் உலகில் வளர்ச்சியடைந்துவரும் பெரும்பாலான நாடுகளுக்கு நிதியுதவி கிடைக்கும் நல்ல நிலைமை ஒன்று உருவாகுமென்றும் நம்பிக்கை தெரிவித்தார். [ரா]

## பாகிஸ்தான் புதிய சபாநாயகர்

[டாக்கா]

பாகிஸ்தானின் விஞ்ஞானத் தொழிற்துறை அமைச்சரான ஜனுப் ஹமீட் நாஸிர் பக்தா அந்நாட்டின் சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தொடர்ந்து முன்னுள் சபாநாயகர் பதவியிலிருந்து விலக்கப்பட்டமையினுலயே ஜனுப் நாஸிர் புதிய சபாநாயகராக நியமிக்கப்பட்டார் இவருக்கு வயது 42 ஆகும் பாகிஸ்தானின் பாராளுமன்ற சபாநாயகராக இருந்தவர்ளுள் வயதில் மிகக் குறைந்தவர் இவராவார். [ரா]

## சந்நிதி ஆலய நிர்வாகிகள் ஜனுதிபதியை சந்திப்பர்

(வல்வெட்டித்துறை)

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலய தேர் எரிப்பு சேதங்கள் பற்றியும், பத்து வாரங்களாக பூஜைகள், ஆராதனைகள் நடைபெறுமல் இருப்பதுபற்றியும் ஆலய நிர்வாகிகள் ஜனுதிபதிக்கு யாழ் அரச அதிபர் ஊடாக முறையிட்டதைத் தொடர்ந்து ஜனுதிபதி ஆலய நிர்வாகிகளைத் தம்மை ஜூன் 2ந் திகதி சந்திக்கும்படி பணித்திருந்தார்.

போக்குவரத்து சீராக இல்லாமையாலும், இப்பகுதியில் நடைபெறும் சம்பவங்களினுலும் ஜனுதிபதியை சந்திப்பதை பின்போட்டிருந்த ஆலய நிர்வாகிகள் அடுத்த வாரம் ஜனுதிபதியை சந்திப்பார்கள் என நிர்வாகிகளில் ஒருவர் தெரிவித்தார்.

யாழ். அரச அதிபர் ஏற்கனவே கொழும்பு சென்றிருப்பதாகவும் இவர்கள் அங்கு சென்று யாழ். அரச அதிபரை சந்தித்து அவர் மூலமாக ஜனுதிபதியைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவர். இச் சந்திப்பின்போது தொண்டமானுறு இராணுவ முகாமை அகற்றவேண்டும் என ஜனுதிபதியை வற்புறுத்துவர் எனவும் அவர் கூறினர். (க)

## இத்தடவை 400 மாணவர்கள் கூடுதலாக தெரிவு

(கொழும்பு)

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மேலதிகமாக 400 மாணவர்கள் இந்த ஆண்டு அனுமதிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம் உட்பட விஞ்ஞானபீடங்களுக்கே இந்த மாணவர்கள் அனுமதிக்கப்பட

[7-ம் பக்கம் பார்க்க]

## ஐரிஷ் போராட்டத்துக்கு யு. எஸ். செனட் ஆதரவு?

### றீகன் குற்றஞ்சாட்டுகிருர்

வாஷிங்டன் ஜூன்-1

"ஐரிஷ் குடியரசின் பயங்கரவாதிகள் அமெரிக்காவில் தஞ்சம் புகுவதை கடினமாக்கி அவர்களைத் திருப்பி அனுப்பும் புதிய சட்டத்துக்கு செனட் சபை தடையாகவுள்ளது" என்று அமெரிக்க ஜனுதிபதி திரு றெனல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

"ஐரிஷ் போராட்டம் நியாயமானது" என்று கூறும் அமெரிக்க செனட்சபை ஓராண்டுக்கு மேலாக அமெரிக்காவின் இந்தப் புதிய சட்டத்தை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது

செனட் சபையின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள திரு. றீகன் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சருக்கு எதிரான செயல் இது என்றும் கூறியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் லிபியா மீது அமெரிக்கா நடத்திய விமானத் தாக்குதலின்போது மிகவும் இக்கட்டான அரசியல் ஆபத்துக்கள் தம்மை எதிர்நோக்கிய போதும் அவைகளைப் பொருட்படுத்தாது திருமதி தட்சர் அமெரிக்காவின் பக்கமே சார்ந்திருந்தார் என்றும் திரு. றீகன் சுட்டிக் காட்டியுள்ளார்.

கச்சேரிக்கு அண்மையிலும்
கல்லூரிகளுக்கு அருகிலும்
பசுமையான சூழ்நிலையில்
இனிய உணவு அருந்திட
இன்று ஆரம்பம்
Old Park Chinese Restaurant
ஓல்ட் பார்க் சைனீஸ் உணவுச்சாலை
207, ஓல்ட் பார்க் வீதி, யாழ்ப்பாணம்.
(A 697)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

பெருமையும் கருணையும் ஒருபோதும் இணைந்திருப்பதில்லை.

— தாமஸ் ஃபுல்லர்

## நமது நோக்கு

### "சுற்றிச் சுற்றி....!"

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அமைதி முறையில் அரசியல் தீர்வொன்றினைக்காண்பதுவே இலங்கை அரசின் இதயசுத்தமான விருப்பமாய் இருந்தால், வீண் காலவிரையத்துக்கு இடமில்லை; இதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்திய அரசின் நல்லெண்ணத்தைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொண்டு தீர்க்கமான ஒரு முடிவுக்கு வரலாம்.

இதற்கான பல சந்தர்ப்பங்களை அரசு கைநழுவவிட்டுள்ளது.

இப்பொழுது இன்னொரு சந்தர்ப்பம்? இதனையும் வீண் விரயம் செய்யப் போகிறார்களா? கடந்த கால அனுபவம் எவரிலுமே நம்பிக்கைவைக்க முடியாமல் இருக்கின்றது.

இந்திய அரசுடன் பேச்சுக்களைத் தொடர தமது அதிகாரிகளை அனுப்பவிரும்புவதாக ஜனாதிபதி இந்திய உயர் ஸ்தானிகரிடம் கூறியுள்ளார் அதற்குமுன் இப்பிரச்னையை ஐ. நா வில் எழுப்பப் போவதாக ஒரு பிரதி அமைச்சரும், பொது நல நாடுகளின் மத்தியஸ்தத்துக்கு விடப்போவதாக இன்னொரு அமைச்சரும் கருத்து வெளியிட்டிருந்தார்கள். ஏற்கனவே இராணுவ ரீதியில் ஆலோசனைகள் வழங்கவும், பயிற்சிகள் அளிக்கவும் என பாகிஸ்தான், இஸ்ரேல், பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளை இவ்விவகாரத்தில் இலங்கை ஈடுபடுத்திக்கொண்டிருப்பது பகிரங்கம்.

என்றாலும் இலங்கைத் தமிழர் விடயத்தில் ஆரம்பமுதலே அமைதித் தீர்வுக்கு உதவும் வகையில் இந்திய அரசு தன்னை ஈடுபடுத்திவந்துள்ளது. அண்டைநாடு என்பதனால் மட்டுமன்றி, பிரச்னைக்குள்ளாகியுள்ள இலங்கை தமிழர் பிரதேசங்கள் இந்தியாவின் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளோடு அண்மித்திருப்பதாலும், இரு பகுதி மக்களும் ஒரே பண்பாட்டையும், மத, மொழி தொடர்புகளைக் கொண்டிருப்பதாலும், இங்கொன்று நடந்தால் அங்கும், அங்கொன்று நடந்தால் இங்கும் பிரதிவிளைவுகள் தோன்றுவதாலும் இலங்கை அரசபடைகளின் நடவடிக்கைகளால் ஒன்றரை லட்சம் பேருக்குமேல் தமிழ் இனத்தவர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளதாலும், இதுபோன்ற பல்வேறு காரணங்களுக்காக இலங்கைத் தமிழர் பிரச்னையில் இந்தியாவுக்கு அதிக அக்கறையுண்டு.

மேலும் இலங்கைஅரசின் கோரிக்கையின் பேரிலே தான் 1983ம் ஆண்டு கலவரத்தின்போது இங்குள்ள சகல தரப்பினரோடும் கலந்துபேசி ஒரு சமரச முடிவினை உருவாக்கும் நோக்குடன் அப்போதைய இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையார் தமது சொந்தத் தூதுவராக திரு. ஜி. பார்த்தசாரதியை இங்கு அனுப்பிவைத்தார்.

எனவே, பல்வேறு வகையாலும் காலம் கடத்தப்பட்டு, இராணுவ முயற்சிகளும் பலனளிக்காது என்ற நிலையில் ஐ நா. என்றும், காமன்வெல்த் என்றும் திசை திருப்புவதில் அர்த்தமில்லை.

"சுற்றிச் சுற்றி சுப்பரின் படலைக்குள்" தான் இந்த விவகாரம் தீர்க்கப்படவேண்டும். இந்தியாவின் ஆதரவும் நல்லெண்ணமுமின்றி இந்த பிரச்னை ஒரு போதும் தீர்க்கப்படமுடியாது என்பதே விஷயமறிந்தவர்களின் கூற்று. இதனை இனிமேலும் இலங்கை உதாசீனம்செய்துவிடமுடியாது.

தெற்கில் பல இடங்களில் தீவிரவாதிகளின் கைவரிசைகள் இப்போது கலக்கத்தைக் கொடுக்க ஆரம்பித்துள்ளன. வடக்கிலும் கிழக்கிலும் விமானக்குண்டு வீச்சு ஷெல்அடி, ஹெலிகொப்டர் தாக்குதல்கள் மூலம் நிகழ்ந்த உயிர்க்கொலைகள், உடைமை அழிப்புக்களை கெட்டித்தனமாக மறைத்துவிட எடுக்கப்பட்ட முயற்சிகள் படுதோல்வியைக்கண்டுள்ளன. தென்பகுதியில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்களோடு விமானக் குண்டுவீச்சுக்களை ஒப்பிட முடியுமா?

"பயங்கரவாதப் பயங்கரவாதம்" எனக் கூச்சலிடுபவர்கள் நடத்தியுள்ள பயங்கரவாதம்பற்றி யார் குரல் எழுப்புவது?

தமிழ்நாடு குரல் எழுப்பியுள்ளது அங்குள்ள மக்கள் சுமார் 5 கோடி பேர் ஒரு நாள் அமைதி ஆர்ப்பாட்ட பேரணிகளையும் கடையடைப்புக்களையும் நடத்தி இங்கு தமிழர்களுக்கு நடக்கும் அக்கிரமத்தை உலகறியச் செய்துள்ளார்கள்.

சிங்களவர்களுக்கு நடந்துள்ள கொடுமையைமாத்திரம் நாம் வரவேற்கின்றோமென்றில்லை. அரசின் தவறான அணுகுமுறையின் விளைவே இது!.

இருக்கும் நல்வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொண்டு அமைதித்தீர்வொன்றை உருவாக்குவதற்கு அரசுமுயலவேண்டும். அதையே இன்று நிலைமைகள் கட்டுமீறிப்போயிருக்கும் வேளையில் நாடும் மக்களும் விரும்புவார்கள்.

# உங்கள் குழந்தைகளுக்கு சத்துணவு ஊட்டுங்கள்

சமநிலைப்படுத்தப்பட்ட போதியளவு சத்துணவானது உடலின் அனுசேப இயக்கங்களுக்கும் வளர்ச்சிக்கும், தொழிற்பாடுகளுக்கும் இன்றியமையாததொன்றாகும்.

கருப்பையில் சிசுவின் உற்பத்தி ஆரம்பமாகும்போது ஆரம்பிக்கும் மூளை வளர்ச்சியானது முதல் மூன்று வருடங்கள் பூர்த்தியடையும்போது பூரணமாகிறது. சிசுவின் வளர்ச்சியானது கருப்பையில் கடைசி மூன்று மாத காலத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காண்பித்துப் பின்பு ஒழுங்கான, நிலையான வளர்ச்சியானது பால் பருவத்திலும் குழந்தைப்பருவத்திலும் நடைபெறுகின்றது.

கர்ப்பத் தாய்மார்களில் ஏற்படும் மந்த போஷணை காரணமாக அநேகமான சந்தர்ப்பங்களில் நிறைகுறைவான குழந்தைகள் பிறக்கின்றன. பிறக்கும் பிள்ளைகளும் மந்த போஷணையுடைய குழந்தைகளும், பிள்ளைகளும் அதிகளவில் நோய்க்கிருமிகளின் தொற்றுதலுக்குட்படுகின்றன. உதாரணமாக இரப்பை குடல்அழற்சி. கசம், குக்கல், நிமோனியா போன்ற நோய்கள் உண்டாகின்றன. மேற்கூறிய காரணங்களினால் பிள்ளைகள் வருந்தி இறக்க நேரிடுகிறது.

எனவே மந்த போஷணையுடைய பிள்ளைகளுக்கும், கர்ப்பத் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் மேலதிக உபஉணவு வழங்குதல் இன்றியமையாததொன்றாகும். இந்த உப உணவானது சமநிலைப்படுத்தப்பட்ட ஓர் போஷாக்கு உணவாக இருப்பதுடன் மலிவானதாகவும் இலகுவில் உள்ளூரில் கிடைப்பதாகவும் இருக்கின்றது.

யாழ். போதனா வைத்திய சாலையின் ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப் பிரிவு, நல்ல சமநிலைப்படுத்தப்பட்ட இரு உப உணவுகளை அறிமுகப்படுத்தி இருக்கின்றது. அவை யாவன: [1] இலைசேர் பால் கஞ்சி, [2] ஜீவாகாரம் [அரிசி-சோயா-உழுந்துக்கலவை].

**[1] இலைசேர் பால் கஞ்சி**

இதனைத் தயாரிப்பதற்குப் பின்வரும் பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஒரு கிலோ பச்சை அரிசி, ஒரு முழுத் தேங்காய்த் துருவல் (400 கிராம்), சீனி 175 கிராம், மாஜரின் 50 கிராம், பச்சை இலை [ஏதாவது கீரை வகை] ஒன்று 175 கிராம், சிறிதளவு உப்பு என்பவை சேர்த்துச் சமைக்கலாம். முதலில் அரிசியை நன்கு வேகவைத்துப் பின் ஏனைய பொருள்களைச் சேர்க்கவேண்டும். அத்துடன் இலைசேர் பால் கஞ்சியின் போஷாக்கின் தரத்தை உயர்த்துவதற்காக 400 கிராம் பால் மாவும் சேர்க்கலாம். சமைத்த 100 கிராம் இலை சேர் பால் கஞ்சியில் 10 கிராம் புரதமும் 380 கி. கலோரி சக்தியுமுண்டு.

1—6 வயதுடைய சிறுவர்களுக்கு 100—150 கிராம் இலை சேர் பால்கஞ்சியானது போதுமானதாகும்.

**[2] ஜீவாகாரம்:-**

[அரிசி, சோயா, உழுந்து மா கலவை]

ஜீவாகாரமானது ஏற்கனவே தயாரித்த ஒரு சிறந்த உப உணவாகும் ஜீவகாரமானது பொரி அரிசி மா 65 வீதமும், கோது நீக்கி வறுத்த சோயா மா 25 வீதமும், வறுத்த உழுந்து மா-10 வீதமும் சேர்ந்து விஞ்ஞான முறைப்படி சுகாதாரமான முறையில் நன்கு அரைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டது. 100 கிராம் ஜீவாகாரத்தில் 16 5 கி. புரதமும், 400 கி. கலோரி சக்தியும் உள்ளது.

ஜீவாகாரமானது ஆரம்ப முதலுணவு கொடுக்கத் தொடங்கிய குழந்தைகளுக்கு (அதாவது 4 மாத வயது பூர்த்தியடைந்த குழந்தைகளுக்கும்) மற்ற போஷாக்குடைய பிள்ளைகளுக்கும், கர்ப்பத் தாய்மார்களுக்கும், பாலூட்டுந் தாய்மார்களுக்கும் இலகுவில் சமிபாடடையக் கூடியதும் விரும்பி உண்ணக் கூடியதுமான அதி சிறந்ததோர் உப உணவாகும். அத்துடன் சகல வயதினரும் இந்த ஜீவாகாரத்தை மாற்றுணவாகவும் பயன்படுத்தலாம்.

**தயாரிக்கும் முறை:-**

1-2 கரண்டி ஜீவாகாரத்தை சீனியுடன் கலந்து சுடுநீர் அல்லது பாலுடன் சேர்த்துக் களி போலச் செய்து கரண்டியினால் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். வளர்ந்த பிள்ளைகளுக்கும், பெரியவர்களுக்கும் தேவையான அளவு ஜீவாகாரத்துடன் தேங்காய்த் துருவல், சீனி, சுடு நீர்அல்லது பாலுடன் சேர்த்து உருண்டைகளாகச் செய்து உண்ணலாம்.

சீனி, தேங்காய், பால் சேர்ப்பதால் உப உணவின் தரமும் உயர்த்தப்படுகின்றது.

இவ் உப உணவானது உள்ளூரில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஓர் உன்னத உப உணவாகும் ஜீவாகாரத்தை வீட்டில் தயாரிக்கலாம் கடைகளிலும் பெற

(5ம் பக்கம் பார்க்க)

**ஆரம்பசுகாதார ஆராய்ச்சிப் பிரிவு**
**யாழ். போதனா வைத்தியசாலை**

# போதைவஸ்துக்கு தமிழ்ப் பகுதிகளில் முற்றாகத் தடை!

## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"போதைவஸ்து தமிழ்ப் பகுதியின் எப்பகுதியிலும் விற்பனைசெய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. மீறித் தமிழீழத்தின் எப்பகுதியிலாவது போதைவஸ்து விற்பனை செய்யுமிடத்தோ, அல்லது எம்மக்கள் மத்தியில் இதன் பாவனையைப் புகுத்துவோர் மீதோ மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கின்றோம்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள், "போதைவஸ்து ஓர் உயிர்கொல்லி; இதிலிருந்து எம் இனத்தைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

இப்பிரசுரத்தில் மேலும் காணப்படுவதாவது:-

"எம்மக்களை ஆரோக்கிய மற்றவர்களாக்கிப் படிப்படியாக அழிக்கும் நோக்குடனும் கூர்மையடைந்துள்ள விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் விதமாகவும் சில ஏகாதிபத்திய சக்திகள் தமிழீழத்தில் போதைவஸ்துகளை விநியோகித்து வருகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். கோட்டைக்கு எதிரிலுள்ள கூட்டுறவுத் திணைக்களமும் இருபாலைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைக்கு எதிரிலுள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இதுவரைகாலம் இயங்கிவந்த கூட்டுறவுத் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவு இருபாலை சந்தியில் உள்ள நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின் மேல்மாடிக்கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகமும் தீவுப்பகுதி பண்டத்தரிப்பு, காரைநகர், அச்சுவேலி, நீர்வேலி, மானிப்பாய், பல நோக்குக்கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகவும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளையின் மேற்பார்வையின் கீழ் இருபாலையிலும், யாழ்ப்பாணம், நல்லூர், தென்மராட்சி, வடமராட்சி சங்கானைபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். கந்தையாவின் மேற்

(5ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் பட்டப்பகலில் மாணவியின் சைக்கிளை பறித்துக்கொண்டு ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை தமது வீட்டுவாசலில் சகமாணவி ஒருவருடன் பேசிக்கொண்டிருந்த மாணவி ஒருவரின் புத்தம் புதிய லேடீஸ் சைக்கிளொன்றை இனந்தெரியாத நபரொருவர் பலாத்காரமாகப் பறித்தெடுத்து அந்த சைக்கிளிலேயே ஓடிமறைந்தாராம். இச்சம்பவம் யாழ். றக்கா வீதியில் நடந்தது.

அதே வீதியைச்சேர்ந்த செல்வி ஜெயந்தி ஜெஸிந்தா என்பவரே சைக்கிளைப் பறிகொடுத்தவராவர். தனியார் கல்லூரிக்கு கல்விகற்கச் சென்றுவிட்டு வந்து வீட்டுவாசலில் சைக்கிளுடன் சிநேகிதியொருவருடன் கதைத்துக் கொண்டிருக்கையிலேயே, அவர் சைக்கிளை பறிகொடுத்தார். சைக்கிளைப் பறித்த திருடன் சுமார் 35-வயதானவர் என்றும், பச்சை சாரமும் வெள்ளை ஷேர்ட்டும் அணிந்திருந்தாரென்று தெரிவிக்கப்படுகிறது.

மூவாயிரம் ரூபா பெறுமதியான இந்தப் புதிய 'ஏஸியா சைக்கிள்' 8 ஏ. பி. 1817 என்ற இலக்கமுடையது. (பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியாவில் மூன்று கடைகளில் கொள்ளை

[வவனியா]

வவனியா நவீன சந்தையிலுள்ள மூன்று கடைகளிலும் கதவு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று கடைகளினதும் பிரதான கதவுகள் உடைக்கப்பட்டே உணவுப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே வவனியாவிலுள்ள ஸ்ருடியோ ஒன்றிலும் முன்கதவு உடைக்கப்பட்டிருக்கக் காணப்பட்டதாயினும் பொருட்கள் எதுவும்கொள்ளையிடப்படவில்லை.

## போதைவஸ்து..

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சமீபத்தில் எடுத்த புள்ளி விபரப்படி 2000 பேர்வரை இதன் பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் பாடசாலை மாணவ மாணவியரும் அடங்கியுள்ளனர் என்பதை ஒவ்வோர் பெற்றோரும் நன்கு கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

''கடந்தவாரத்தில் மட்டும் 13 பேர்வரை யாழ். வைத்திய சாலையில் இதன் பாவனையால் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

''நெருக்கடிமிக்க இன்றைய சூழ்நிலையில் ஓர் கொடிய எதிரியிடமிருந்து எம்மக்களைக் காக்க அரும்பாடுபட்டுவரும் இவ்வேளையில் எம்மை நாமே அழிக்கும்விதமாகப் போதைவஸ்து பாவனை தமிழீழமெங்கும் பெருகிவருகிறது. எனவே உயிர் கொல்லியாகவும், எம் சமுதாயத்தைச் சீரழிப்பதுமான போதைவஸ்துப் பாவனையைஉடன் நிறுத்துவோம்''.

(ஐ)

## கூட்டுறவு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையின்கீழ் யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெருவில் உள்ள கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள எண் பார்வை அலுவலகக் கட்டிடத்திலும் இயங்குகின்றன.

கூட்டுறவு அபிவிருத்தி சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கத்தின் காரியாலயமும் இருபாலையிலே இயங்கும் என கூட்டுறவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(வா)

## உங்கள் குழந்தை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றுக் கொள்ளலாம்.

இலை சேர் பால் கஞ்சியானது எந்த வீட்டிலும் இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு தயாரித்து, உங்கள் குழந்தைகளுக்குக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கூட்டி சிறந்த ஆரோக்கியமான ஓர் சமுதாயத்தை அமையுங்கள்.


வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர்) - புதிய பிரதி)

லிடோ
தினசரி காலை 10-30, 2-30 மாலை 6-30
முத்துராமன். சுஜாதா நடித்த
மயங்குகிறுள் ஒரு மாது
[புதியபிரதி-கலர்]

லிபேட்டி சினிமாவில்.
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
துப்பாக்கிவீரன் James Coburn
கவர்ச்சி அழகி Sophia Lorene
நீக்ரோ அழகன் Jim Brown நடித்த
FIRE POWER
5 பதக்கங்கள் பெற்ற மாபெரும் வெளியீடு.
10-00, 2-15, 4-15, 6-30
வயது வந்தவர் களுக்கு மட்டும்


## ஆஸ்பத்திரியில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ராசன் [19 வயது] யாழ்ப்பாணம், எம். ஜெகதீசன் கொக்குவில், வி விஜயேந்திரன் [25வயது] கோவில்வீதி யாழ்ப்பாணம், ஆர். குட்பு [20 வயது] யாழ்ப்பாணம், எஸ் மணிவண்ணன் [18 வயது] அத்தியடி புதுவீதி யாழ்ப்பாணம். சுந்தரராசா [26வயது] காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம், நசிம் [19 வயது] யாழ்ப்பாணம்- வி. குணநேசன் [37 வயது] யாழ்ப்பாண கே. விமல்ராஜ் [32 வயது] கெய்யாத்தோட்டம், எஸ் அப்பையா [56 வயது] கண்ணபுரம் கொட்டடி, அ. பைசல் [18 வயது] நாவலர் வீதி யாழ்ப்பாணம், ரவீந்திரன் [20 வயது] யாழ்ப்பாணம், வி ரகு [26 வயது] யாழ்ப்பாணம், எஸ். அப்துல் காதர் [35 வயது] யாழ்ப்பாணம், வி. வில்வராஜ் [16 வயது] பலாலிவீதி யாழ்ப்பாணம், வி. ப ராமநாதன் [20 வயது] நல்லூர், பா. குகநேசன் [18 வயது] புளியங்கூடல் க. ராசன் [19 வயது] நாவாந்துறை, வி. ஜெயராம் [24 வயது] வர்த்தலைவிளான். கந்தையா திசவீரசிங்கம் [60 வயது] நாவற்குழி, க. பொன்னுத்துரை [55 வயது] கொட்டடி. அ. இராசசூரியர் [23 வயது] யாழ்ப்பாணம்.

## ரயில் பெட்டிகளின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலானேர் வெயாங்கொடப்பகுதியைச் சேர்ந்தவர்களளெனவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக்குண்டு வெடிப்பில் 12பேர் மரணமடைந்ததும் 55 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

[செ]

### ஓராண்டு நினைவஞ்சலி

★ ★ ★

**திருமதி கனகம்மா இராமநாதன்**

அன்னையின் மடியில்: 14-5-1941
இறைவனின் அடியில்: 15-5-1985
திதி: 2-6-1986

குமுதினிப் படகில் கொலையுண்ட எம் அன்புத் தெய்வமே! உன் நினைவுகள் என்றும் அழியா.

எங்கள் ஒளிவிளக்காக விளங்கி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் வழிநடத்திய அன்புத்தெய்வமே! தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்ருேம்.

கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள், உற்ருர்,
உறவினர்

## இலங்கையின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கூடவே இலங்கை அரசு தமிழருக்கெதிராக மேற்கொள்ளும் ராணுவ வன்முறைகளை நிறுத்திவிட்டு வெளிப்படையாக அமைதியை நாடும் செயல் முறைத் திட்டத்தில் இறங்க வேண்டுமென்ருர்.

(செ)

## ராணுவ....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருபெண்கள்உட்பட 39 பேர் காயமடைந்தனர்.

நான்குகடைகள, ஏழு வீடுகள், வித்தியாலயம் ஒன்றும் சேதமடைந்தன.

நேற்றுநண்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமான ஷெல் தாக்குதல் பிற்பகல் ஐந்து மணிவரை நீடித்தது.

யாழ் சத்திரத்து சந்தியில் அடுத்தடுத்து ஐந்து ஷெல்கள் வீதியில்விழுந்து வெடித்ததினுல் ஒருவர் பலியானுர். 33 பேர்காயமடைந்தனர்.

யாழ் பஸ்நிலையத்தில் நவீன மார்க்கட்முன்னுல் ஷெல்வெடித்ததினுல் இருவரும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இலங்கை வங்கிக்கு எதிரில் ஷெல்வெடித்ததினுல் நால்வரும் காயமடைந்தனர்.

### மல்லி பரிதாபமரணம்

யாழ் சந்திரத்து சந்தியில் திருவள்ளுவர் சிலைக்கு அருகில் 'மல்லி' என்றழைக்கப்படும் முருகையா நவரட்ணம் என்ற மலைநாட்டு இளைஞர் பலியானுர்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த இவர் தனியார் பஸ்ஸில் கிளீனராகப் பணியாற்றுவதுடன் நடைபாதை வியாபாரம் செய்துவந்தாரென்றும் கூறப்படுகிறது. இவர் தற்காலிகமாக அரியாலையில் தங்கியிருந்தவர் நேற்று நண்பகல் சத்திரச் சந்திக்கு சைக்கிளில் சென்றசமயம் முதலாவது ஷெல் விழுந்து வெடித்துக் காயமடைந்தார்.

நிலத்தில் விழுந்து துடிதுடித்துக் கொண்டு இருந்த இவரை தூக்கிவரப் பலத்த முயற்சி எடுக்கப்பட்டது, கயிறுமூலம் அவரை வீதியோரத்தற்கு கொண்டு வர சாரதி ஒருவர் முயன்றபோது மற்ற 'ஷெல்' வெடித்தது. இதனுல் சிலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து மேலும் சில ஷெல் அவ்விடத்தில் விழுந்து வெடித்ததால் பலர் காயமடைந்தனர்.

கோட்டையிலிருந்து நேர் பாதையான சத்திரத்து சந்தியில் கிடந்த 'மல்லியை' மீட்க முடியாததினுல் அவர் அவ்விடத்தில் மரணமானுர். அவ்விடத்தில்காயமடைந்த சுமார் 33 பேர் உடனடியாக யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

சத்திரத்து சந்தியிலுள்ள சிவகுமார் ஸ்ரோர்ஸ், சுகுணு ரேடிங், வசந்தா ஸ்ரோர்ஸ், நியூ ஆனந்தி ஸ்ரோர்ஸ் கதவுகள ஷெல் தாக்குதலினுல் சேதமடைந்தன. சிவகுமார் ஸ்ரோர்ஸ் இரும்புக் கதவை துளைத்துச் சென்ற 'ஷெல்' பாகங்கள் உள்ளே இருந்த தேங்காய் எண்ணெய் தகரங்களை ஊடுருவியதால், கடைக்குள்ளே ருந்து எண்ணெய் வெளியில் வடிந்தோடிய படியிருந்தது ஸ்ரீ ஆனந்தாஸ்ரோஸ் முன்பாக உள்ள எண்ணெய் தகரங்கள் ஷெல்லினுல் தாக்கப்பட்டு எண்ணெய் வீதியில் ஓடியபடியிருந்தது

சத்திரத்துச் சந்தியில் ஷெல் வெடித்தபோது, அண்ணு திராவிடமுன்னேற்ற கழகநகர செயலாளர் எஸ். சௌந்தரராஜனுக்கும் துடையில் காயம் ஏற்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொட்டடிப் பகுதியில் நேற்று ஷெல் தாக்குதலினுல் ஏழுவீடுகள் சேதமடைந்தன சம்பவம் நடந்தபோது இவ்வீடுகளில் எவரும் இருக்கவில்லை. கொட்டடிப் பகுதியிலிருந்து ஒருவாரத்திற்கு முன்னரே சுமார் 200 குடும்பங்கள் வெளியேறிவிட்டனர்.

[ந]

# பொறுப்புடன் பிரஜைகள் குழுக்கள் இயங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''சிறீலங்கா அரசு எம் இனத்தை அளித்துவருகின்ற இதே வேளையில் விடுதலை இயக்கங்களின் ஐக்கியம் மிக அவசியமானதே.

''நெருக்கடி மிக்க இவ்வேளையில் இயக்கங்களுக்கிடையேயான உள் ஐக்கியத்தைகுலைப்பதற்காக திட்டமிட்டுச் செயற்படுகின்ற தீய சக்திகளையும், விஷமிகளையும் இனங்காணுவதில் இயக்கங்களும், மக்களும் விழிப்புடன் செயற்படவேண்டும்''

இவ்வாறு ''குழப்பவாதிகளை இனங்கண்டு விழிப்புடன் செயல்படுவோம்'' என்ற பெயரில் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''பிரஜைகள் குழுக்கள் போராட்டத்தின் நெருக்கடிச் சூழலில் தம் பொறுப்புக்களினின்றும் வழுவி செயல் படுவது உண்மையாக வருந்தத்தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாகும். பிரஜைகள் குழுக்கள் தமதுகடமைகளையும் வரையறைகளையும் சரியாக உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்வது இன்றைய சூழ்நிலையில் அவசியமானதென்பதை வலியுறுத்துகிருேம்''.

## உடனடி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்திய அரசும், மாநில அரசுகளும், அனைத்து அரசியல் கட்சிகளும், பொது மக்களும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டுமென்று அனைத்திந்திய சமாதான ஒருமைப் பாட்டுச்சங்கம்' கேட்டு கொண்டுள்ளது.

நேற்று திருச்சியில் நடைபெற்ற இச்சங்கத்தின் மாநாட்டிலேயே இவ்வாருன தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

(து)

## மூடிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 5-30 மணிக்கே வவனியா வந்தடைந்தன.

இராணுவத்தினர் நகர்ந்து சென்றபோது அவர்களுக்கு முன்னுல் எந்த வாசனங்களும் செல்வதற்கு அனுமதிக்கப் படாததாலேயே இந்த வாகனங்கள் காலதாமதமாக வவனியா வந்து சேர்ந்தன.

இது இவ்வாறிருக் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட 3 தனியார்பஸ்கள் இராணுவ அணியின் பயணத்தால் கொழும்புசெல்ல முடியாத நிலையில் வவனியா இறம்பைக்குளம் தேவாலயத்தில் தரித்து நின்றன.

வவனியாவிலிருந்து வழமையாக கொழும்புசெல்லும் வாகனங்களும் நேற்று கொழும்பு செல்லவில்லை

மூடப்பட்ட வாகனத்தில் சில நாட்களுக்குமுன் பழுதடைந்த நிலையில் ஆனையிறவு ராணுவ முகாமில் தரையிறங்கி ஹெலிகொப்டர் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

(து)

## பேர்ஞட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ர்பாக ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுடன் பேசுவதற்காக நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

இந்திய நிர்வாக சீர்திருத்தத்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரத்துடன் இனப்பிரச்னை தொடர்பாக தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்து திரு. திலகரத்னு இச் சந்திப்பின்போது ஜே. ஆர். ஜெயவர்த்தனுவிடம் எடுத்துக் கூறுவார்,

திரு. திலசரத்தினுஇலங்கை வருவதற்கு முன் இந்திய வெளியுறவுத்துறைச் செயலர் திரு. வெங்கடேஸ்வரனுடனும் இனப்பிரச்னை தொடர்பாக பேசியுள்ளார்.

[து]


HOTEL GNANAMS
பாதுகாப்பான இடம்!
ரம்மியமான சூழல்!
குறைந்த விலையில் சைனீஸ் உணவுகள், மதுபான வகைகள்
புதிய மெருகுடன் இப்பொழுது இயங்குகிறது.
''ஹொட்டேல் ஞானம்ஸ்''
இல. 299, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.
போன்; 22082, — 23067.
[C-2664]

எமது புதிய வெளியீடுகள்
கமல் - அம்பிகா - K. R. விஜயா
''விக்ரம்''
(CAMERA COPY)
சிரஞ்சீவி - ராதிகா
''மச்சக்காளை''
(THOMSUN MASTER)
குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665
[C-2660]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வருடாந்த பொது பட்டமளிப்புவிழா ஆகஸ்ட் மாதம் 30ந் திகதி சனிக்கிழமை மாலை நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு தம்பையா நடராசா தலைமையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறும்.

சித்த வைத்தியத் துறை கொழும்பு பல்கலைக் கழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டபின் இத்துறைக்காக இம்முறையே பட்டமளிப்பு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதித் தேர்வு, முதுதத்துவமாணித் தேர்வு, விஞ்ஞானமாணித்தேர்வு, கலைமாணித்தேர்வு, வணிகமாணத் தேர்வு, விஞ்ஞானமாணி, தொழில் நிர்வாகத் தேர்வு, ஆயுள்வேத சத்திர சிகிச்சைத் தேர்வு, சங்கீதம்—பரதநாட்டியம் டிப்ளோமாத் தேர்வு ஆகியவற்றில் 1985ல் சித்தி அடைந்தவர்களுக்கு இப்பட்டமளிப்பு நடைபெறும். பட்டமளிப்புக்கான தம்வேண்டுகோளை விடுக்கவுள்ளவர்கள் உரியபடிவத்தில் ஜூலை 7ந் திகதிக்கு முன்பாக விண்ணப்பிக்குமாறும், மருத்துவமாணித் தேர்தவில் சித்தி அடைந்தோர் ஜூலை 21ந் திகதிவரை விண்ணப்பிக்கலாமென்றும், அத்துடன் சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டிய கடித உறையை பதிவாளர் விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளனர். [ஐ]

# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
தி தி- 19 (2 - 6 - 1986)
கிழமை- திங்கள்
திதி- தசமி
பி. ப. வரை
நக்ஷத்திரம்: உத்தரட்டாதி
மு. ப. வரை

மேடம்: ●டும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் உறவினர் ஒருவரின் ...கை உற்சாகத்தையளிக்கும் எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்.

இடபம்: சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசர முடிவின் மூலம் குறை கேட்க நேரிடும்.

மிதுனம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடம் கிடைக்கும் பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

கடகம்: இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் பயணம் குறித்து திட்டமிடப்படலாம். புகழ் தரும் விடயங்களும் நடைபெறும்.

சிங்கம்: கருத்தினில் மோசம் வாட்டிடும். பிணியம் தானே. மிகையான போக்கினால் மனதும் பாழாய்ப்போகும் பகை மூட்டம் தேன்றும்

கன்னி: குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும் செலவினங்கள் கட்டுப்படியாகவே இருக்கும். காதல் விவகாரங்களுக்கும்இடமுண்டு

துலாம்: மறைமுகமாக நடத்திய காரியமொன்று இன்று அம்பலத்துற்கு வரலாம். குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். நண்பர்களும் காலைவாரி விடுவர்

விருச்சிகம்: நல்லதைச்செய்வீர்கள். பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சமுகத்தில் மதிப்பும் உயரும்.

தனுசு: எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும் வியாபாரிகளுக்கு நன்மையுண்டு.

மகரம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும் நீண்டநாள் கடன் நிவர்த்தியகும். பதவி உயர்வுக்கு வழிகோலப்படும்.

கும்பம்: கழுகுப்பார்வை வட்டமிடும். பகைவர் காத்திருப்பர். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில். மதுபானத்தைத் தவிர்க்கவும்.

மீனம்: குடும்பத்தில் அமைதி குன்றும். நன்றாக ஆலோசித்த பின்பே எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டும். உடல் நலத்தைப்பேணவும்.

திருமலை ரவீந்திரன்



# முதுகலைமாணி பட்டம்பெற்ருர்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக உளவியல்துறை விரிவுரையாளர் ஆ. க. ஆனந்தநாதன் தத்துவத்தில் முதுகலை மாணிப்பட்டம் பெற்றுள்ளார்.

குப்பிளானைச் சேர்ந்த இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமெரிக்க பிரித்தானிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களின் உதவியுடன் நடத்தப்படும் "ஒப்பீட்டுச் சமய மெய்யியல்" என்னும் துறையில் இன்னொரு ஆய்வைத் தற்போது மேற்கொண்டு வருகிருர்.

இவர் ஈழநாடு, வீரகேசரி, தினகரன் போன்ற நாளேடுகளிலும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினரால் வெளிபிடப்படும் இளங்கதிர், இந்து மன்றத்தினரால் வெளியிடப்படும் இந்து தருமம், போன்ற சஞ்சிகைகளிலும் தத்துவம், உளவியல், சமயம். சமய மெய்யியல், தமிழ்மொழி போன்ற துறைகளில் பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# 'சத்திரச்சந்தி' கடைகள் மூடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சி எஸ். கே. சந்தி என அழைக்கப்படும் சத்திரத்துச் சந்தியிலிருந்து கோட்டையை நோக்கிச் செல்லும் கே. கே. எஸ் வீதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் ...வும் மூடப்பட்டிவருகின்றன.

இவ் வீதியில் உள்ள சுமார் 50 கடைகள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன

யாழ். கோட்டையிலிருந்து துப்பாக்கிச்சூடும், ஷெல் தாக்குதல்களும் நடைபெறுவதனால் இப்பகுதியிலுள்ள கடைகளைப் பொதுமக்கள் அணுகுவதும் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது. [ஐ]

# மேற்கு ஜேர்மனி பயணமானுர்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை பணிப்பாளரும், வர்த்தக ஒலிபரப்புச் சேவையின் பதில் பணப்பாளருமான திரு. வே. அ. திருஞானசுந்தரம் ஒலிபரப்புத்துறையில் விசேட பயிற்சி பெறுவதற்கு மே மாதம்19 ம் திகதி திங்கட்கிழமை மேற்கு ஜேர்மனி பயணமானுர்.

மேற்கு ஜேர்மனி 'கொலோன்' நகரிலுள்ள "டோயிசவலே" என்ற ஜேர்மனி வானொலி பயிற்சி நிலையத்தில் ஒலிபரப்புத்துறையில் "பயிற்றுவோருக்கான பயிற்சி" யில் நூான சித்தி பெறவிருக்கும் திரு திருஞானசுந்சரம் அங்கு மூன்று மாதகால பயிற்சியை மேற்கொள்ளவிருக்கிருர்.

பொதுசன தொடர்பு சாதனங்களில் பத்திரிகை ஆசிரியராக ஆரம்பித்த திரு. திருஞானசுந்தரம் வானொலித் துறையில் நீண்டகால அனுபவம் பெற்றதுடன் அண்மையில் ஜப்பான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலும் விசேட பயிற்சி பெற்று வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானுர்

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப் பகுதிக்கு உறவினரைப் பார்க்கச் சென்ற யாழ் நில அளவைக் காரியாலயத்தில் கடமைபுரியும் சின்னத்தம்பி இராமலிங்கம் (55 வயது) என்பவர் துப்பாக்கிச் சூடுபட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று பிற்பகல் நடந்த இச்சம்பவத்தில் சூடுபட்டவர் புங்குடுதீவைச் சேர்ந்தவர்.

தமது உறவினரைப் பார்ப்பதற்காகச் சென்றவர் பாதை சரியாகத் தெரியாததால் இராணுவம் முகாமிட்டுள்ள பொலிஸ் விடுதிப் பக்கமாகச் சென்று திரும்பியபோதே இவருக்குச் சூடுபட்டதாம். [ஐ]

# சகல லொறிகளும் பரிசோதனை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரும் சகல லொறிகளும் துரிதபரிசோதனைக்குட்படுத்தப்படும்.

ஆனையிறவிலும், அநுராதபுரத்திலும் இந்தப்பரிசோதனைகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமீபத்தில் கொழும்பில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ய)


## பிரயாண ஒழுங்குகள்

✯ கனடா ✯ ஜேர்மனி
✯ பிரான்ஸ் ✯ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் குறைந்த செலவில் அழைத்துச் செல்வார்.

5 6 86-ல் Denmark செல்ல விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

V M. Balasingam,
Hotel Orchid Inn,
57J/6 Galle Road,
Wellawatte

உடனடியாகப் பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதியில் கிளீனர் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,
★ குவைத்தில் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் துரிதகெதியில் செய்துதரப்படும்.

## GROUP ATLANTIC

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக] (A710)



## CLASSES FOR PROFESSIONAL EXAMS in North. Nov / Dec, 1986.

| COURSES | | ஆரம்பம் |
|---|---|---|
| I. C. M. A. | Section A | 7-6-86 |
| | Section B | 7-6-86 |
| | Professional I | 14-6-86 |
| | Professional II | 21-6-86 |
| A. A. T. | Prelim | 7-6-86 |
| | Inter | 7-6-86 |
| | Finals | 14-6-86 |
| I. D. P M. | Part I | 16-6-86 |
| | Part II | 16-6-86 |
| Chartered | Prelim | 7-6-86 |
| | Licenciate | Commenced |
| I. A. B. | Foundation | 4-6-86 |
| | Inter | 4-6-86 |
| | Finals | 4-6-86 |

பிரபல விரிவுரையாளர் குழு

திருவாளர்கள்: K KANAGAMANOKARAN N. VARENDRAN
A RATNAM. செல்வி MURUGESU, R. SURESH
S SIVAM, K. KAMALAKUMAR
S. THATCHANAMOORTHY, D. GNANASEELAN.

✯ All registration with London institutes will be done by us.

✯ A. A. T. Registration செய்யவிரும்பும் மாணவர்கள் July – 10ம் திகதிக்கு முன்னர் எமது Institute க்கு நேரில் வரவும். G.C E. (O/L) 6 பாடங்களுடன் A. A. T. மூலம் நேரடியாக I. C M. A. Section B பயில ஓர் சந்தர்ப்பம்.

✯ 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் G. C. E. (O Level.) உடன் Accountant ஆக விஷேச சந்தர்ப்பம்.

## North Ceylon Technical Institute

14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.

TELE: 24355 A 721


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வையில் பதற்றநிலை; பொதுமக்கள் பாதிப்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை இராணுவமுகாமிலிருந்து அடிக்கடி 'ஷெல்' பிரயோகிக்கப்படுவதாலும், வல்வை நகரசபை தபாற்கந்தோருக்கு அண்மையிலுள்ள வீடுகளிலும், றோட்டிலும் ஷெல்கள் வந்து விழுவதாலும் இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் நேரகாலத்துடன் செல்வதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அத்துடன் காலை முதல் மாலை வரை இப்பகுதிகளில் ஹெலிகொப்டரும், விமானமும் சுற்றிச்சுற்றி வட்டமிடுவதால் மீனவர்கள் மீன பிடிக்கச்செல்லமுடியவில்லை. இதனால் கடற்றொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதி கடைகள் சந்தைகளும் நேரகாலத்துடன் பூட்டப்படுவதால், சனநடமாட்டம் குறைந்து, தெருக்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

## திருநிலைப் படுத்தப்பட்டார்



[யாழ்ப்பாணம்]

சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்தைச் சேர்ந்த செல்வன் பிலிப் நேசகுமார் செல்லையா உதவிக் குருவாக இலங்கை அக்கிலிக்கன் திருச்சபையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருநிலைப்படுத்தும் ஆராதனை கடந்த 23ம் திகதி கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள வாழும் மீட்பர் கிறிஸ்து பேராலயத்தில் நடைபெற்றது.

யூன் முதலாம் திகதியிலிருந்து இவர் நுவரெலியாப் பகுதிக்கு உதவிக் குருவாக நியமிக்கப்பட்டுள்ளார்.

செல்வன் பிலிப் நேசகுமார் செல்லையா காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவராவார் இவர் கல்லூரியில் படித்த காலத்தில் கிறிஸ்தவ மாணவ இயக்கத்தின் வளர்ச்சிக்காக ஊக்கமாக உழைத்தார், பிலிமத்லாவை இறையியல் கல்லூரியில் 4 ஆண்டுகள் இறையியல் கல்வியை மேற்கொண்டபின் உதவிக் குருவாக நியமனம் பெறத் தெரிவு செய்யப்பட்டார். இவர் இலங்கைப் புகையிரத இலாகாவில் ஹெட் காட்டாகப் பணிபுரிந்த காலஞ்சென்ற திரு. விக்டர் செல்லையாவினதும், யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரியும் திருமதி செல்லையாவினதும் இரண்டாவது புதல்வனுவார். (க)

## யாழ். வகுப்புத் தொழிலாளர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வகுப்புத் தொழிலாளர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத்தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகிகள் வருமாறு;- தலைவர்: திரு. மு பஞ்சலிங்கம், உபதலைவர்: திரு. மா, செல்வநாயகம், காரியதரிசி: திரு. செ வேலு, உப காரியதரிசி: திரு. பொ, சந்திரன், தனதிகாரி: திரு. சி இராமுப்பிள்ளை, உப தனதிகாரி: செ. முத்துராசா.

உறுப்பினர்கள் :- திருவாளர்கள் எம். இந்திரன், செ. இராசன், மு கந்தசாமி, எஸ். எம். கார்மேகம், க. தர்மராசா, இ விஜசித்தம்பி, சு. மார்க்கண்டு. (வி)

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் ஞானவீர சங்க சன சமூக நிலையத்தின் 43 வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் க. ம. ராஜேந்திரன், உபதலைவர் த. பரமநாதன், செயலாளர் மு. சிவஞானம், உபசெயலாளர் அ சற்குருநாதன், பொருளாளர் ச. சத்தியமூர்த்தி, 14 பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

[யாழ்ப்பாணம்]

யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர். தலைவர்: மு. இராமலிங்கம், (அதிபர்) உபதலைவர்கள்: வ, கந்தையா கலாநிதி சு. மோகனதாஸ், செயலர்: ம. கதிர்காமநாதன், உப செயலர்: மு. குகதாசன், பொருளாளர்: மு. விஸ்வநாதன், மற்றும் 15 நிர்வாக உறுப்பினர்களும்தெரிவு செய்யப்பெற்றனர். [ஐ]

## இத்தடவை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளனர். இலங்கையின் எட்டுப் பல்கலைக்கழகங்களும் இந்த மேலதிக மாணவர் தொகையை ஏற்றுக்கொள்ளும்.

மொத்தமாக இவ்வருடம் 6000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

## "புளொட்" அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் [புளொட்] காரைநகர் யாழ். பிராந்திய உறுப்பினர் சு நகுலராஜா [பட்லர், குகன்] வின் 90-வது நாள் நினைவஞ்சலியையொட்டி துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

''உன் இழப்பு நிகழுமிந்த சமர்களத்தில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பே'' என்று புதுக்கவிதை வடிவில் அஞ்சலி செலுத்தி இப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது. [து]

## ஈ.பி.ஆர்.எல். எவ். அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலை முன்னணியைச்சேர்ந்தத. ரமநாதன் (மாஸ்ரர்) இயற்கை மரணமடைந்தமையை யிட்டு மேற்படி முன்னணி அஞ்சலிப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது,

''தொடரும் போராட்டத்தில் இடையில் விடைபெற்றவனுக்கு...'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தில் ''இயற்[illegible] சங்கமமாகி விட்ட [illegible]

காகவும், கொல்லப்பட்ட எங்கள் தோழர்களுக்காகவும் எவராலும் வெல்லப்படமுடியாத விடுதலையுணர்வை அஞ்சலிப் பூக்களாக அர்ப்பணிக்கின்[illegible] ளது. (ஐ)

## யாழ். ஆஸ்பத்திரி கூரைமீது 'செஞ்சிலுவை' அடையாளங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி கூரைமீது ''செஞ்சிலுவை'' அடையாளச் சின்னம் மையினால் வரையப்பட்டுள்ளது.

இருபது 'றெட்குறேஸ்' சுகள் இவ்வாறு வரையபபட்டுள்ளன. யாழ் ஆஸ்பத்திரியில் ஷெல்தாக்குதல், குண்டுகள் வந்து விழுகின்ற காரணத்தினால் இவ்வடையாளங்கள் கூரைகளில் வரையப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.

ஆகாய விமானத்திலிருந்து பார்த்தால் தெரியத்தக்க வகையில் இவ்வடையாளங்கள் பெரிதாக வரையப்பட்டுள்ளன. (ஐ)

## யாழ். குடாநாட்டில் எந்நேரத்திலும் பஸ் சேவை தடைப்படலாம்!

[யாழ்ப்பாணம்]

எரிபொருள தட்டுப்பாடு காரணமாக எந்நேரத்திலும் யாழ் குடாநாட்டில் வ. போ ச. பஸ் சேவை தடைப்படலாம் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அனுராதபுரத்திற்கு அப்பால் சென்று வக்கனங்களில் எரிபொருள் எடுத்துவர முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சில உள்ளூர் பஸ் சேவைகள் நடைபெறவில்லை.

தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நேற்று நடைபெற்றன. [க]

## பதற்றத்தில் கிளிநொச்சி

[கிளிநொச்சி]

கிளிநொச்சி இராணுவ முகாமை நோககிப் போராளிகளால் வீசப்பட்ட மோட்டார் ஷெல் தாக்குதலையடுத்து இராணுவ முகாமிலிருந்து பதில ஷெல் தாக்குதல் திருநகரை நோக்கி மேற்கொண்டதில் திருநகர் வாசியான ஆப்டீன் என்பவர் காயமடைந்தார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தையடுத்து கிளிநொச்சிப் பகுதியில பெரும் பதற்றம் உருவாகியது.

### இராணுவம் நடைபவனி

மேமாதம் 30-ம் திகதிசுமார் 200 இராணுவத்தினருக்கு மேல் நடைபவனியாக கிளிநொச்சி நகர் ஊடாகக் கண்டி வீதியால் பரந்தனை நோக்கிச் சென்றார்கள். இவர்களின் பின்னால் பல கவசவாகனங்களும் சென்றன. ஆகாயத்தில் ஹெலிகொப்டர்களும் நகரைச் சுற்றி வட்டமிட்டன, கிளிநொச்சி பதற்ற நிலையில் உள்ளது.

## ச. ச. நிலையத்தின் முன்மாதிரி

[யாழ்ப்பாணம்]

யாழ். கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சிக்குத் தம்மாலான சகலஉதவிகளையும் செய்வதென அரசடி ஜனசக்தி சன சமூக நிலையத்தினர் முடிவு செய்துள்ளனர்

நெருக்கடியான காலகட்டத்தில் மேற்படி பாடசாலையின் வளர்ச்சி தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த போதிலும் தற்சமயம் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்றுள்ள திருமதி அ துரைசிங்கம்முயற்சியாலும் ஆசிரியர்கள் முயற்சியாலும் பாடசாலை மிகவும் துரிதமாக முன்னேறுவதனைப் பாராட்டுவதாகவும் சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்

இவ்வாண்டுதான் இப்பாடசாலையில் முதன்முதலாகவிளையாட்டுப் போட்டிகள் இடம் பெற்றது. இதற்கு மேற்படி நிலையத்தினரும் பெற்றோர்களும் பெருமாதரவு தெரிவிகதிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மூவர் காயம்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து அடிக்கப்பட்ட ஷெல் தாக்குதலால் மூவர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடந்த இச் சம்பவத்தில் காயமடைந்த செயலாப்தீன் ஆபதீன [வயது 28வயது] கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த மற்ற இருவரான இராசதுரை [70 வயது] மாரிமுத்து [50 வயது] ஆகிய இருவரும கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## மின்கம்ப தண்டனை

[மட்டக்களப்பு]

சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த பத்திநாதன் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

செங்கலடிச்சந்தியில் உள்ள மின்கம்பமொன்றில் கடந்த சனிக்கிழமை காலை இவரது சடலம் கட்டிவைக்கப்பட்டிருந்தது. (மா)

## வவனியா முதல் ஓமந்தை வரை எட்டு மைல் தூரம் இராணுவம் நடை பவனி

[வவனியா]

வவனியா இராணுவ முகாமிலிருந்து நேற்றுக்காலை புறப்பட்ட சுமார் 100 இராணுவத்தினர் நடைபவனியாக ஓமந்தை இராணுவ முகாமுக்குச் சென்றனர் சுமார் 8மைல் தூரத்தை இவர்கள் கடக்க 4 மணிநேரம் எடுத்ததாம்.

இராணுவத்தினரின் இந்த நடைபவனியினால் வவனியா யாழ்ப்பாணம் போக்குவரத்துச்சேவை நேற்று முன்தினம் நண்பகல்வரை தடைப்பட்டிருந்தது. ராணுவத்தினர் ஓமந்தையை அடைந்ததுமே மீண்டும் போக்குவரத்து சேவை சகஜநிலையை அடைந்தது.

## மட்டு நகரில் 6 பேர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் காலை திடீரென வாகனங்களில் வந்திறங்கிய அதிரடிப் படையினர் திடீர் தாக்குதல் நடத்தினர்கள்.

இத்தாக்குதல் சம்பவத்தால் பீதியடைந்த பொதுமக்கள் நாலா பக்கமும் சிதறி ஓடத்தொடங்கினர்.

இச்சம்பவத்தின் போது 6 பேர் வரை கைது செய்து, முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். [மா]


2-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி முருகேசு கோமதி

மண்ணுலக : 12-02-1968
விண்ணுலகம்: 26- 5-1984
திதி; 02-06-1986

உன்பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.
கொழும்புத்துறை.
(C 255?)



ENGINEERING COUNCIL EXAMINATION

Part I வகுப்புக்கள்

ஜூன் 14-ந் திகதி முதல் பிரதி சனி, ஞாயிறு.
விபரங்கட்கு:
ஜூன் 7-ம், 8-ம் திகதிகளில் காலை 9—12 மணி வரை.

SUPERMAN ENGINEERS INSTITUTION
AUTO COOL ENGINEERS மேல்மாடி,
கந்தப்பசேகரம் றோட், (சாந்தி தியேட்டர் அருகாமையில்)

Classes will be conducted by Engineers.

(C 2656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
திங்கட்கிழமை 2-6-86

## ரயில்பாதை திருத்தம்

[கொழும்பு]

நேற்றுமுன் தினம நடைபெற்ற குண்டு வெடிப்பினுல் சேதமுற்ற வெயாங்கொட ரயில்பாதை நேற்று சீர்செய்யப்பட்டது.

இதனையடுத்து இப்பாதையில் நேற்று ரயில்சேவை இடம் பெற்றது. [செ]

# வெயாங்கொட குண்டுவெடிப்பு: ரயிலிலிருந்து இறங்கி ஓடிய 5 தமிழர்கள் தீமூட்டிக் கொலை!

[யாழ்ப்பாணம்]

வெயாங்கொட ரயில் நிலையத்தில் இடம்பெற்ற ரயில் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது பதற்றமடைந்து ரயில் பெட்டிகளிலிருந்து இறங்கி ஓடிய 5தமிழ்ப் பிரயாணிகள் குண்டர்களால் தாக்கப்பட்டு உயிருடன் தீமூட்டி எரிக்கப்பட்டனர்.

இப ரிதாப சம்பவத்தால் எரிந்துகிடக்கும் சடலங்கள் அடையாளம் காணமுடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றும் ரயில் பெட்டிகளில் இருந்த தமிழ்ப் பிரயாணிகள் குண்டர்கள ல் தாக்கப்பட்டதுடன் அவர்களின் உடைமைகளும் சூறையாடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து கல்லோயாவூடாக நேற்று முன் தினம் கொழும்பு நோக்கிச் சென்ற பிரயாணிகள் ரயிலில் வெயாங்கொட ரயில்நிலையத்தில் குண்டு வெடித்ததால் 12 பேர் பலியானதும் 55பேர்காயமடைந்ததும்தெரிந்ததே [மா]

## 'வைத்தீஸ்வரா' வகுப்பறை ஷெல் அடியில் சேதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலய பின்பகுதி வகுப்பறை ஷெல் தாக்குதலினுல் பலத்த சேதமடைந்தது.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில், '9 ஏ' வகுப்பு கூரை மீது ஷெல் விழுந்து வெடித்ததினுல் முற்பகுதி ஓடுகள், மரங்கள பலத்த சேதமடைந்தன.

நண்பகல் 1-30 மணிக்கு பாடசாலை மூடப்படுவது வழக்கம் என்றும், ஒரு பாடசாலை தினமாக இருந்திருந்தால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. [க]

## இருஇளைஞர் கைது

[வவனியா]

வவனியா கச்சேரி தடைமுகாம் அருகே நேற்று முன் தினம் இரு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

குருமன்காட்டைச் சேர்ந்த வான் சாரதியான ஐ. தெய்வேந்திரனும், வியாபாரியான பூந்தோட்டத்தைச் சேர்ந்த ம. பால்ராஜுவுமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

பால்ராஜ் கைதுசெய்யப்பட்டபொழுது அவரது சேட் பெக்கொட்டில் நாலாயிரம் ரூபா பணம் இருந்தது. [து]

## மட்டு–கொழும்பு ரயில் சேவை ரத்து

[மட்டக்களப்பு]

வெயாங்கொடவில் இடம் பெற்ற ரயில் குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை ரத்துச்செய்யப்பட்டுள்ளது. ஆனுல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூருக்கான ரயில் சேவைகள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வெயங்கொட ரயில்நிலையத்தில் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட ரயில்வந்துநின்றபோது குண்டுவெடித்ததால் 12 பிரயாணிகள் பலியானதும், 51பேர் காயமடைந்ததும் தெரிந்ததே. (மா)

## விசாரணையின் பின்னர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து இரு வாரங்களுக்கு முன்னர் தனியார் பஸஸில் வந்தபோது ஆனையிறவு முகாமில், விசாரணைக்காக கூட்டிச்செல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவரான கோப்பாய் நாவலடியைச்சேர்ந்த க. தில்லைநாதன் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## மீண்டும் கைதடி–கோப்பாய் பாலம் போக்குவரத்து

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்-கைதடி பாலம் திருத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுமுதல் மீண்டும் வாகனப்போக்குவரத்து அங்கு ஆரம்பமானது

குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட இப்பாலத்தைத திருத்துவதற்காக கடந்த ஒருமாத காலமாக இவ்வீதியால் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் சகல வாகனங்களும் புத்தூர் சாவகச்சேரியூடாகவே சென்றுவந்தன.

கடந்த பலமாதங்களாக நாவற்குழியூடாக சகலவாகன போக்குவரத்தும் நடைபெறுவதில்லை. (க)

## தீவுப்பகுதி உணவு நிலைமை சீரடைந்து வருகிறது

[நெடுந்தீவு]

தீவுப்பகுதியில் ஏற்பட்டிருந்த உணவுச்சட்டுப்பாடு இப்பொழுது சீர் அடைந்து வருவதாகதெரிவிக்கப்படுகின்றது.

கடந்தமாதம் தரைவழிமார்க்கமான பண்ணை வழிப் போக்குவரத்து தடைப்பட்டிருந்ததல் தீவுப்பகுதிகளுக்கு உணவுப்பொருட்கள் எடுத்துச் செல்வது தடைப்பட்டிருந்தது.

தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களான நெடுந்தீவு, புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை ஆகியன அவைறுக்குத் தேவையான அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை போதுமான அளவு காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் பெற்றுச் சென்றுள்ளன.

## முதல்போட்டி சரிசமம்

(மெக்ஸிக்கோ)

மெக்ஸிககோவில் நடைபெற்றுவரும், ''உலகக்கிண்ண'' உதைபந்தாட்டப் போட்டியின், முதலாவது ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது.

தறபோதைய உலக சாம்பியனுன இத்தாலியும் பல்கேரியாவும் மோதிய இம் முதல் ஆட்டம், எதிர்பார்த்த அளவு விறுவிறுப்பு இல்லாவிட்டாலும், ஆட்டம் தொடங்கி 23-வது நிமிடம் இத்தாலி ஒரு கோலைப்போட்டது. இடைவேளையின்போது இத்தாலி 1—0 கோலால் முன்னணியில் நின்றது.

ஆட்டம் முடிவடைவதற்கு சிலவினடிகள் இருக்கும்போது பல்கேரியா ஒரு கோலைப் போட்டமையால், ஆட்டம் வெற்றி - தோல்வியின்றி முடிவடைந்தது. இத்தாலிக் கோஷ்டியின் முன்னணி வீரர் இப்போட்டியில் விளையாடவில்லை. இப்போட்டியை ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரசிகர்கள் நேரடியாகப் பார்த்தது குறிப்பிடத்தக்கது. [வி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126,

## மக்கள் வங்கி நகை

## அடகுவைத்தோரை இன்று கூடுமாறு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

மக்கள்வங்கியின் வடபகுதிக் கிளைகளில் நகைகள் அடகுவைத்தோர் சங்கத்தினர், வல்வெட்டித்துறைக்கிளை, யாழ். பிரதான வீதி கிளை அலுவலகத்தின் முன்பாக அவற்றின் வாடிக்கையாளர்களை இன்று காலை 9 மணிக்கு, கூடுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அடகுநகைகள் மீளளிப்பது சம்பந்தமாக அடகுவைத்தோர் சங்கம் பின்வரும் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளது.

அடகுவைத்தோர் சங்கத்தின் போராட்டத்தின் விளைவாக வடபகுதியில் இயங்கும் மக்கள்வங்கிகளின் அடகுநகைகள் ஒவ்வொரு கிளையாக மீளளிப்புச் செய்யப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே. இறுதியாககாங்கேசன்துறைக் கிளையின் நகைகள் மீளளிப்புச்செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ் பிரதானவீதி மக்கள் வங்கிக்கிளை, வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளை ஆகிய இரு கிளைகளதும் பணம் செலுத்திய நகைகள மீளளிப்பதென வங்கிநிர்வாகத்தால் பலாலி இராணுவ முகாமிலுள்ள வங்கிப் பணிமனைக்கு கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி இரு வங்கிக்கிளைகளினதும் வாடிக்கையாளர்கள் தங்களது வங்கி முன்பாக இன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப்பிரதிநிதிகளினுல் தெரிவிக்கப்படும்மேலதிக விபரங்களை நேரில் பெற்றுக் கொள்வதற்காக தவருது கூடுமாறு சங்கம் வேண்டிக் கொள்கிறது.

மேற்படி கிளைகளின் விநிகோகத்தைத் தொடர்ந்து ஏனைய கிளைகளின் மீளளிப்பும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவுள்ளதால் ஏனைய கிளைகளின் வாடிக்கையாளர்களை மனம்தரளாது இருக்குமாறு சங்கம் கேட்டுக்கொள்கிறது. [மா]

## காலமானுர்

[யாழ்ப்பாணம்]

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவரான திரு. விஸ்வலிங்கம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் காலமானுர். இவர் சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார்

திரு விஸ்வலிங்கம் 83-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற கலவரங்களினுல்பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள்கொழும்பிலிருந்து யாழ் அனுப்பப்படநடவடிக்கைகளை எடுத்ததுடன் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமுக்கும் பொறுப்பாளராகவிருந்தார். 'சற்றடே றிவியூ'வை வெளியிடும் 'புது யுக' அச்சகத்தின் பொது முகாமையாளராகவும் அவர் பணிபுரிந்தார்.

இறுதிச் சடங்குகள் இன்று தாவடியில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### முருகையா நவறட்ணம் (றைவர் மல்லி)

கண்டி கிரிமெட்டிலா எஸ்டேட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரியாலை, 3-ம் ஒழுங்கை, ஆனந்தன் வடலியைச் சேர்ந்த முருகையா நவறட்ணம் (றைவர் மல்லி) அகால மரணமானுர் இவர் முருகையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும், மணியின் அன்புக் கணவருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (02-06-86) காலை 10-00 மணியளவில் துண்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

[C-2667] தகவல்: நண்பர்கள்

### கார்த்திகேசு விசுவலிங்கம் J. P தாவடி

ஓய்வுபெற்ற பொலிஸ் திணைக்கள நிர்வாக அதிபரும், குடிவரவு குடியகல்வு திணைக்கள உதவிக்கட்டுப்பாட்டாளரும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமான கார்த்திகேசு - விசுவலிங்கம் காலமானுர் அன்னுர், மகாலஷ்மியின் அன்புக் கணவரும், சிவானந்தன் [பொறியியலாளர், கனடா] ஞானந்தன் [மருத்துவபீட இறுதியாண்டு, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத்தந்தையும் சாந்தினி [கனடா] யின் அன்பு மாமனுரும, தங்கம்மாவின் சகோதரரும், திருமதி செல்லத்துரையின் [அளவெட்டி] மருமகனும், நாகலிங்கம் [சுதுமலை] பேராசிரியர் மகாலிங்கம் [பேராதனை பொறியியல்பீடம்] அருந்தவநாயகி. அருளானந்தம், விக்னேஸ்வரி, சிவகுரு, வைத்திய கலாநிதி சிவனேஸ்வரி சிறிரங்கலிங்கம் இங்கிலாந்து' செந்தில்நாதன் [கனடா] சிவகுமாரன் [லண்டன்] செல்வக்குமாரன் [லண்டன்] ஆகியோரின் மைத்துனருமாவார் இறுதிக்கிரியைகள் பிள்ளையார் கோவிலடி, தாவடியிலுள்ள அன்னுரின் இல்லத்தில் இன்று 02-06-1986 திங்கள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

### திருமதி மதலேனு வேதநாயகம்

திருமதி மதலேனு வேதநாயகம் அவர்கள் [முன்னுள் ஆசிரியை, புனித பெனடிற் கல்லூரி கொட்டாஞ்சேனை] காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற வித்துவான் வேதநாயகம் [முன்னுள் ஆசிரியர் புனிதபெனடிக்ற் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அஞ்சலோ வேதநாயகம். வி ஆர். வேதநாயகம் (உதவி அரசாங்க அதிபர், திருக்கோயில்], கிறகறி வேதநாயகம் [ஆசிரியர், புனிதசாள்ஸ் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம்] றெபேட் வேதநாயகம் [உரைபெயர்ப்பாளர், பாராளுமன்றம்]- புஷ்பராணி பவானந்தன் [ஆசிரியை நைஜீரியா] ஆகியோரின் அன்புத்தாயாரும், ரத்னு [ஆசிரியை புனிதமரியாள் வித்தியாலயம் பம்பலப்பிட்டி], செல்வராணி [ஆசிரியை தம்பிலுவில் மகாவித்தியாலயம்], ஐடா, ராணி, பவானந்தன் [ஆசிரியர் நைஜீரியா] ஆகியோரின் அன்புமாமியும், வால்டர், பீட்டர். எல்மர், அமுதன், கவிதா, லக்ஷிகா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

தகவல் தருபவர்: சத்தியநேசன்,
52, ஸ்டேஷன்ரோட், யாழ்ப்பாணம்

[C2659]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org